

சிங்கம்புணரியில் ஜல்லிக்கட்டு காளைகள் அணிவகுப்பு: கவர்னர் ரவி பார்வையிட்டார்

சிவகங்கை, மே.23

சிங்கம்புணரியில் நடைபெற்ற ஜல்லிக்கட்டு காளைகளின் அலங்கார அணிவகுப்பை பார்வையிட்டு மகிழ்ந்தார்.

பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக சிவகங்கை மாவட்டம் சிங்கம்புணரிக்கு வந்த தமிழக கவர்னர் ஆர்.என்.ரவியை மாவட்ட கலெக்டர் ஆஷாஅஜீத் பூங்கொத்து கொடுத்து வரவேற்றார்.

முன்னதாக அவர் அங்கு உள்ள சேவுகப்பெருமாள் அய்யனார் கோவிலில் சாமி தரிசனம் செய்தார். அங்கு அவருக்கு கும்ப மரியாதை அளிக்கப்பட்டது.

அதன்பின் சிங்கம்புணரி சேவுகமூர்த்தி கோசாலை டிரஸ்ட் சார்பில் நடந்த விழாவில் பங்கேற்றார். சிவகங்கை சமஸ்தானம் தேவஸ்தான அறங்காவலர் ராணி மதுராந்தகி நாச்சியார் தலைமை தாங்கினார். குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் வாழ்த்தி பேசினார்.

பின்னர் கோவில் எதிரே உள்ள சேவுகமூர்த்தி கோசாலைக்கு சென்றார். அங்கு இருந்த மாடுகளுக்கு கீரை, காய்கறிகளை கொடுத்தார். மேலும் அங்கு வேலுநாச்சியார் படத்தை திறந்து வைத்து மலர் தூவி மரியாதை செய்தார்.

இதையடுத்து அங்கு ஜல்லிக்கட்டு காளைகளின் அலங்கார அணிவகுப்பு மற்றும் ரேக்ளாரேஸ் மாட்டு வண்டிகளின் அணிவகுப்புகளை ஆர்வமுடன் பார்வையிட்டு மகிழ்ந்தார். அதனை தொடர்ந்து அதே வளாகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டு இருந்த கண்காட்சியினை பார்த்து ரசித்தார். அதில் இடம் பெற்று இருந்த மண்பானைகளின் தயாரிப்பு முறைகள் குறித்து கேட்டறிந்தார்.

இந்நிகழ்ச்சியில் எச்.ராஜா உள்பட பலர் கலந்துகொண்டனர்.

மதியம் 1 மணிக்கு காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழக விருந்தினர் மாளிகைக்கு கவர்னர் சென்றார். அங்கிருந்து கண்டதேவி சொர்ணமூர்த்தீஸ்வரர் கோவிலுக்கு சென்று வழிபட்டார். அங்கு கண்டதேவி கிராமமக்கள் மற்றும் சிவாச்சாரியார்கள் கவர்னர் ஆர்.என்.ரவிக்கு பூரண கும்ப மரியாதை அளித்து வரவேற்றனர்.

விக்கிரவாண்டி அருகே பம்பை நதிக்கரையில் தொல்லியல் துறை இணை இயக்குனர் ஆய்வு



விழுப்புரம், மே 23–

விக்கிரவாண்டி அருகே பம்பை நதிக்கரையில் ஒதுங்கிய பண்டைய நாகரிக பொருட்களை தமிழ்நாடு தொல்லியல் துறை இணை இயக்குனர் சிவானந்தம் ஆய்வு செய்தார்.

விக்கிரவாண்டி தொகுதி அய்யூர் அகரம் அடுத்த சுப்பம்பேட்டை, தென்னமாதேவி உள்ளிட்ட பகுதிகளில் கடந்த 2024ம் ஆண்டு நவம்பர் மாதம் பெஞ்ஜல் புயல் காரணமாக பம்பை நதியில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கால் பண்டைய காலத்து பொருட்கள் கரை ஒதுங்கின. இதுகுறித்த தகவல் அறிந்ததும் தொல்லியல் ஆய்வாளரும், விழுப்புரம் அரசு கல்லூரி பேராசிரியருமான ரமேஷ் மற்றும் குழுவினர் பம்பை நதிக்கரையில் ஆய்வு செய்து, பண்டைய நாகரிக எச்சங்கள், சுமார் 2 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னதாக பம்பை ஆற்று நாகரிகத்தில் சங்ககாலத்தில் பயன்படுத்தப்பட்ட பானை ஓடுகள், சூது பவழம், கண்ணாடி மணி, ஸ்படிக மணிகள், காதணிகள், சுடுமண் தக்களி, கற்கருவிகள், சுடுமண் பொம்மைகள், சங்ககால செங்கல்கள், முத்திரைகள் ஆகியவற்றை சேகரித்தனர்.

பின்னர், பம்பை நதிக்கரையோரம் அகழ்வாராய்ச்சி செய்ய வேண்டுமென கோரிக்கை விடுத்தனர். இதையடுத்து சட்டசபையில் விக்கிரவாண்டி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அன்னியூர் சிவா பம்பை நதிக்கரையோரம் அகழ்வாராய்ச்சி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பேசினார். இதையேற்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பம்பை நதி நாகரிகம் குறித்து அகழ்வாராய்ச்சி செய்ய அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

அதன்படி நேற்று முன்தினம் மாவட்ட கலெக்டர் ஷேக் அப்துல் ரஹ்மான், தொல்லியல் துறை இணை இயக்குனர் சிவானந்தம், அன்னியூர் சிவா எம்.எல்.ஏ. ஆகியோர் அய்யங்கோவில்பட்டு, தென்னமாதேவி பகுதிகளில் உள்ள எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்ட இடங்களை பார்வையிட்டு ஆய்வு செய்தனர். ஆய்வின்போது கோட்டாட்சியர் முருகேசன், தாசில்தார் செல்வமூர்த்தி, மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் ஜெயச்சந்திரன், பேரூராட்சி துணை தலைவர் பாலாஜி, தொல்லியல் துறை ஆய்வாளர்கள் சுபலட்சுமி, விக்டர் ஞானராஜ் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.



சர்வதேச உயிரிப்பல்வகைமை தினம் 2025

சிறப்பாக பணியாற்றிய வன அலுவலர்களுக்கு விருது : ராஜகண்ணப்பன் வழங்கினார்

சென்னை, மே 23–

வனம் மற்றும் கதர்துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், சர்வதேச உயிரிப்பல்வகைமை தினம் 2025–ஐ துவக்கி வைத்து சிறப்பாக பணியாற்றிய வன அலுவலர்கள் மற்றும் களப்பணியாளர்களுக்கு விருதுகள் வழங்கினார்.

ஒவ்வொரு ஆண்டும் மே 22–ம் தேதி சர்வதேச உயிரியல் பன்முகத்தன்மை தினமாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த நாளை நினைவுகூரும் வகையில், தமிழ்நாடு வனத்துறை நேற்று (22–ம் தேதி) ஒரு கருத்தரங்கு சென்னை தி.நகரில் உள்ள கிராண்ட் ஜி.ஆர்.டி ஹோட்டலில் நடைபெற்றது.

கருத்தரங்கு நடைபெற்ற வளாகத்தில் அமைக்கப்பட்டிருந்த, வனப்பயன்பாட்டுப் பொருட்கள் மற்றும் புத்தகங்கள், அறிக்கைகள் காட்சிப்படுத்தப்பட்டிருந்த அரங்குகளையும் அமைச்சர் பார்வையிட்டார். அமைச்சர் இக்கருத்தரங்கினைத் தொடங்கி வைத்து கருப்பொருள் குறிப்பினை வெளியிட்டு சிறப்புரையாற்றினார்.

அமைச்சர்தமிழ்நாடுவனத்துறையின் ஆராய்ச்சிப் பிரிவின் வன மரபியல் கோட்டத்தினால் அடையாளம் காணப்பட்டு சேகரிக்கப்பட்ட அரிய பூர்வீக புல் விதைகளையும் வெளியிட்டார். பல்வேறு பணிகளில், குறிப்பிடத்தக்க பங்களிப்பை ஆற்றிய வன அலுவலர்கள் மற்றும் களப்பணியாளர்களுக்கு அமைச்சர் விருதுகள் வழங்கினார்.

இந்த நிகழ்வின் போது, வனத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் சுப்ரியா சாகு பேசுகையில், 2030–ம் ஆண்டுக்குள் நிலப்பரப்பில், 30% காடு மற்றும் மரங்களின் பரப்பளவை நாம் எய்த வேண்டும் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்ட கட்டளை என்று அவர் கூறினார்.

சுவரொட்டிகள்

இந்த நிகழ்வில் பல்லுயிர் பெருக்கம், பறவைகள் கணக்கெடுப்பு, கிழக்குத் தொடர்ச்சி மலைகளில் மனித யானைகள் மோதல் குறித்த புத்தகங்கள் மற்றும் சுவரொட்டிகளும் வெளியிடப்பட்டன.

இவ்விழாவில், வனத்துறைத் தலைவர் ஸ்ரீனிவாஸ் ரெட்டி, முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் மிதா பானர்ஜி, தலைமை வன உயிரினக் காப்பாளர் ராகேஷ் குமார் டோக்ரா, தலைமை வனப்பாதுகாவலர் (நிர்வாகம்) தெபாசிஸ் ஜனா, தலைமை திட்ட இயக்குநர் அன்வர்தீன், தலைமை வனப்பாதுகாவலர் கீதாஞ்சலி மற்றும் இணை இயக்குநர் தமிழ்மொழி அமுது, மாவட்ட வன அலுவலர்கள், வனத்துறை களப்பணியாளர்கள் மற்றும் சங்கத் தமிழ் அறிஞர்கள் கலந்து கொண்டனர்.

13,600 பல்லுயிர் மேலாண்மைக் குழுக்கள்

தமிழ்நாடு உயிர்ப்பல்வகைமை வாரியத்தின் கீழ் 13,600 பல்லுயிர் மேலாண்மைக் குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளது என்றும், ரூ.2.06 கோடி வருவாய் ஈட்டப்பட்டுள்ள தாகவும், பயனாளிகளுக்கு ரூ.53.42 லட்சம் விநியோகிக்கப்பட்டுள்ள தாகவும் அமைச்சர் தெரிவித்தார். பலதரப்பட்ட விலங்கினங்கள் மற்றும் தாவரங்களைப் பாதுகாப்பதன் முக்கியத்துவத்தையும், தமிழ்நாடு வனத்துறை நாட்டின் அதன் உயர் நிலையில் உள்ளதனை தொடர்ந்து உறுதி செய்வதையும் அமைச்சர் வலியுறுத்தினார்.



சென்னை கிழக்குக் கடற்கரைச் சாலை 6 வழிச்சாலையாக விஸ்தரிப்பு பணிகள் : எ.வ.வேலு ஆய்வு

திருவான்மியூர் மருந்தீஸ்வரர் கோவில் தேர் செல்லும் பாதை அகலப்படுத்துவம் பணி

சென்னை, மே 23–

சென்னை கிழக்குக் கடற்கரைச் சாலை (இ.சி.ஆர்) – 6 வழிச்சாலையாக விரிவுப்படுத்தப்பட்டு வரும் பணிகளையும், திருவான்மியூர் மருந்தீஸ்வரர் கோவில் தேர் செல்வதற்குசாலை அகலப்படுத்தும் பணிகளையும் நெடுஞ்சாலைகள் துறை அமைச்சர் எ.வ.வேலு ஆய்வு மேற்கொண்டார்.

சென்னை கிழக்குக் கடற்கரைச் சாலையில், நெடுஞ்சாலைத்துறை மூலம் நடைபெற்று வரும் பணிகளை அமைச்சர் எ.வ.வேலு ஆய்வு மேற்கொண்டார்.

"சென்னை கிழக்கு கடற்கரை சாலையில் விரைவான பயணத்தை உறுதி செய்யும் வகையில், மாநில நெடுஞ்சாலைத்துறை பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அந்த வகையில் திருவான்மியூர் முதல் அக்கரை வரை 10.5 கிலோ மீட்டர் நீளத்திற்கு ஆறுவழிச் சாலையாக அகலப்படுத்துவதற்கான பணிகள் நடைபெற்று வருகிறது.

அதேபோல், திருவான்மியூர் முதல் உத்தண்டி வரை 14 கிலோ மீட்டர் தொலைவிற்கு உயர்மட்ட மேம்பாலமும் அமைக்கப்பட உள்ளது.

முன்னதாக இந்து சமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் வரும் சென்னை திருவான்மியூர் மருந்தீஸ்வரர் கோவிலில் உள்ள தேர் செல்வதற்கான வழிகளையும், அங்கு மேற்கொள்ளப்படவுள்ள சாலை விரிவாக்கப் பணிகளையும் ஆய்வு செய்தார்.

கிழக்கு கடற்கரை சாலையில் 2 மீட்டர் அகலத்திற்கு அமைக்கப்பட்டு வரும் மழைநீர் வடிகால்வாய் பணிகளையும் ஆய்வு செய்து, கிழக்குக் கடற்கரைச் சாலையில் நடைபெற்று வரும் பணிகளை விரைந்து முடிக்க ஒப்பந்ததாரர்களுக்கு அமைச்சர் எ.வ.வேலு உத்தரவிட்டார். இந்த ஆய்வின்போது, நெடுஞ்சாலைகள் துறை அரசுச் செயலாளர் இரா. செல்வராஜ், அறநிலையத்துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், சென்னை கலெக்டர் ரஷ்மி சித்தார்த் ஜகடே, நெடுஞ்சாலைத்துறை சிறப்பு அலுவலர் இரா.சந்திரசேகர் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.



திருவள்ளூர் பூண்டி ஊராட்சி ஒன்றியத்துக்கு உட்பட்ட திருப்பேர் ஊராட்சியில் இன்று கலெக்டர் பிரதாப் ஊரக வளர்ச்சித்துறையின் சார்பில் குழந்தைநேய பள்ளி உட்கட்டமைப்பு திட்டத்தின் கீழ் ரூ.28 லட்சம் மதிப்பில் கட்டப்பட்டுள்ள பள்ளி கட்டிடத்தை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

பொது அறிவிப்பு

சென்னை – 55, அண்ணாநகர், மோரை, ஸ்ரீ ராகவேந்திரா நகர், கதவு எண்.142A என்ற முகவரியில் வசிக்கும் **லேட்.C.வேணுகோபால் மனைவி E.K.சுகுணா வேணு, வயது 66 (ஆதார் எண். 3849 8833 4340)** ஆகிய நான் இதன்மூலம் பொதுமக்களுக்கு தெரிவிப்பது என்னவென்றால், என்னுடைய சகோதரன் மனைவி திருமதி.சீனிஜீவராஜ் அவர்களின் அசல் ஆவணம் எண். 3404/ 1989 நாள்: 12.04.1989 **பூந்தமல்லி சார்பதிவாளர் அலுவலகத்தில்** பதிவு செய்யப்பட்டதை, கொரட்டூர் ரயில்வே ஸ்டேசன் பாடி சிவன் கோவில் செல்லும் வழியில் நான் தொலைத்து விட்டேன். மேற்படி அசல் கிரையப்பத்திரம் ஆவணம் காணாமல் போய்விட்டது. மேற்படி அசல் கிரையப்பத்திரத்தை எவரேனும் கண்டெடுத்தால் 89391 68262 என்ற எண்ணில் என்னை தொடர்பு கொள்ளவும். அல்லது கீழ்க்காணும் முகவரியில் தகவல் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

E.K.சுகுணா வேணு, க/பெ.லேட்.C.வேணுகோபால்
கதவுஎண்.142A, ஸ்ரீ ராகவேந்திரா நகர்,
மோரை, அண்ணாநகர், சென்னை – 55.
செல்: 89391 68262

தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவள்ளூர்
ஆண்டுப் பட்டிகை வழக்கு எண். 219/2025

கடந்த 25.11.2019 அன்று, திருவள்ளூர் மாவட்டம் கும்மிடிபூண்டி சரக மருந்துகள் ஆய்வாளர், M/s. Sree Srinivasa Medicals, Gummidipoondi என்ற மருந்து கடையில் Beclamethasone Dipropionate என்ற மருந்தின் மாதிரி எடுத்து, அதை சென்னையில் உள்ள அரசு பகுப்பாய்வு கூடத்திற்கு அனுப்பி அறிக்கை பெற்றதில் மேற்படி மருந்தான Beclametasone Dipropionate ல் 22.36 சதவீதம் மட்டுமே இருந்த காரணத்தால் தரமற்றது என்று அறிக்கை பெற்று, அதன் காரணமாக மேற்படி மருந்து நிறுவனத்திற்கு மருந்துகளை சப்ளை செய்த M/s.Skymap Pharmaceuticals Pvt. Ltd. நிறுவனத்தை முதல் எதிரியாகவும் மற்றும் இயக்குநரான சஞ்சய் குப்தா என்பவரை 2 ஆம் எதிரியாகவும் மற்றும் மற்றொரு இயக்குநரான மணீஷ் கார்க் என்பவரை 3 ஆம் எதிரியாகவும் சேர்த்து, எதிரிகள் மருந்துகள் மற்றும் அழகு சாதனச் சட்டம் 1940 பிரிவு 18(a)(i) r/w 27 (d) ன் கீழ் குற்றம் புரிந்ததாக குறிப்பிட்டு, புகார் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு. அந்த வழக்கு இந்நீதி மன்றத்தால் விசாரிக்கப் பட்டதில், மேற்படி எதிரிகள் 1, 2 மற்றும் 3 குற்றவாளிகள் என்று தீர்மானிக்கப்பட்டு, அவர்களுக்கு மேற்படி குற்றத்திற்கு ஒவ்வொரு பிரிவிற்கும் தலா அபராதம் ரூ.20,000/- விதித்தும் கட்ட தவறினால் மேலும் ஒரு மாதம் மெய்க்காவல் சிறைதண்டனை அளித்தும் இந்நீதிமன்றத்தில் 29.04.2025 அன்று தீர்ப்பளிக்கப்பட்டது. அபராதத் தொகையான ஒவ்வொரு பிரிவிற்கும் தலா ரூ.20,000/- வீதம் மேற்படி எதிரிகளிடமிருந்து வசூலிக்கப்பட்டது. மொத்த அபராத தொகை ரூ.60,000/-

ஓம்./- S. மீனாட்சி
தலைமை நீதித்துறை நடுவர், திருவள்ளூர்

ஜகாட் ஹைடெக் டூல்ரூம் லிமிடெட்

பதிவு அலுவலகம் : எண். 131/2, திருநீர்மலை ரோடு, நாகல்கேணி, குரோம்பேட்டை, சென்னை - 600 044.
E-mail: info@iykot.com | Website : www.iykot.com Tel. No. +91 44 4316 2280. CIN : L27209TN1991PLC021330

31-03-2025 அன்றுடன் முடிந்த காலாண்டு மற்றும் ஆண்டுக்கான தணிக்கை செய்யப்பட்ட தனிப்பட்ட நிதிநிலை முடிவுகள்

(ரூபாய் லட்சங்களில்)

வ. எண்	விவரங்கள்	முடிந்த காலாண்டு			முடிந்த ஆண்டு	
		31.03.2025	31.12.2024	31.03.2024	31.03.2025	31.03.2024
		(த.ஆகாதது)	(த.ஆகாதது)	(த.ஆகாதது)	(த.ஆனது)	(த.ஆனது)
1.	செயல்பாடுகளில் இருந்து மொத்த வருமானம் (நிகர்)	97.00	78.38	7.01	509.97	142.11
2.	நடப்பு காலத்துக்கான நிகர லாபம் / (நஷ்டம்) (வரி, விலக்கு பெற்ற ரகங்கள் மற்றும் / அல்லது சிறப்பு ரகங்களுக்கு முந்தையது)	-27.20	-14.80	-78.05	-105.20	-198.69
3.	நடப்பு காலத்திற்கான நிகர லாபம் / (நஷ்டம்) (வரிக்கு முந்தையது மற்றும் விலக்கு பெற்ற ரகங்கள்)	-27.20	-14.80	-78.05	-105.20	-198.69
4.	நடப்பு காலத்திற்கான நிகர லாபம் / (நஷ்டம்) (வரிக்கு முந்தையது மற்றும் விலக்கு பெற்ற ரகங்களுக்கு பிந்தையது)	-27.20	-14.80	-78.05	-105.20	-198.69
5.	நடப்பு காலத்திற்கான நிகர லாபம் / (நஷ்டம்) (வரிக்கு பிந்தையது) மற்றும் விலக்கு பெற்ற ரகங்களுக்கு முந்தையது	-26.54	-14.80	-78.05	-104.54	-198.68
6.	நடப்பு காலத்திற்கான மொத்தம் விரிவான வருவாய் (நடப்பு காலத்திற்கான லாபம் / (நஷ்டம்) (வரிக்கு பிந்தையது) மற்றும் இதர விரிவான வருவாய் (வரிக்கு பிந்தையது)	-26.54	-14.80	-78.05	-104.54	0.00
7	சமபங்கு மூலதனம்	481.65	481.65	304.20	481.65	304.20
8.	பங்கு ஒன்றின் வருவாய் (சிறப்பு ரகங்களுக்கு முந்தையது) (தலா ரூ.10/- தொடர்ச்சியான மற்றும் தொடர்ச்சி இல்லாத செயல்பாடுகளுக்கானது	-0.29	-0.15	1.28	-1.15	-3.27
9.	அடிப்படை மற்றும் திட்பம்	-0.29	-0.15	1.28	-1.15	-3.27

குறிப்பு :

1. 31-03-2025 அன்றுடன் முடிந்த மூன்று மாதத்திற்கான மேற்காணும் முடிவுகள் தணிக்கையாளர்கள் குழுவால் மறு ஆய்வு செய்யப்பட்டு 22-05-2025 அன்று நடைபெற்ற கம்பெனியின் இயக்குனர்கள் குழு கூட்டத்தில் ஒப்புதல் பெறப்பட்டது.
2. நிறுவனம் ஒரே ஒரு பிரிவில் மட்டும் செயல்படுகிறது.
3. நிறுவனத்தின் சட்டபூர்வ தணிக்கையாளர்கள் மேற்கண்ட 31-03-2025 அன்றுடன் முடிந்த காலாண்டுக்கான நிதிநிலை முடிவுகளின் வரையறுக்கப்பட்ட மதிப்பாய்வை மேற்கொண்டுள்ளனர்.
4. நிறுவன விவகார அமைச்சகத்தின் (MCA) அறிவிப்புக்கு இணங்க, பிப்ரவரி 16, 2016 தேதியிட்ட நிறுவனங்கள் (இந்திய கணக்கியல் தர நிலைகள்) விதிகள் 2015 ("Ind AS") அறிவிப்பின் படியும், ஏப்ரல் 1, 2016 முதல் தேதியுடன் ஏப்ரல் 1, 2017 ("Ind AS") ஐ ஏற்று நிறுவனம் தனது தனியான நிதி அறிக்கைகளை தயாரித்துள்ளது.

இடம் : சென்னை
தேதி : 22-05-2025

இயக்குனர்கள் குழுவின் ஆணைப்படி
ஜகாட் ஹைடெக் டூல்ரூம் லிமிடெட்டுக்காக
ஒப்பம்/-
லிகிதா துகார்
முழுநேர இயக்குனர் - DIN : 09768742

இந்தியா ரேடியேட்டர்ஸ் லிமிடெட்

CIN: L27209TN1949PLC000963
பதிவு அலுவலகம்: 88, மவுண்ட் ரோடு, கிண்டி, சென்னை - 600 032. Tel: 044-40432210
மின்னஞ்சல்: cs@indiaradiators.com இணையதளம்: www.indiaradiators.com

31 மார்ச், 2025 அன்று முடிவடைந்த காலாண்டு மற்றும் ஆண்டிற்கான தணிக்கை செய்யப்பட்ட நிதிநிலை முடிவுகள்

செபி (பட்டியல் கடமைகள் மற்றும் வெளிபடுத்தல் தேவைகள்) விதிமுறைகள், 2015ன் ("செபி பட்டியல் விதிமுறைகள்") விதிமுறை 33க்கு இணங்க, வெள்ளிக்கிழமை மே 23, 2025 அன்று நடைபெற்ற கூட்டத்தில் இந்தியா ரேடியேட்டர்ஸ் லிமிடெட் ("நிறுவனம்") இயக்குநர்கள் குழு மார்ச் 31, 2025 அன்று முடிவடைந்த காலாண்டு மற்றும் ஆண்டிற்கான தணிக்கை செய்யப்பட்ட நிதிநிலை முடிவுகளை ("முடிவுகள்") அங்கீகரித்தது.

நிறுவனத்தின் சட்டப்பூர்வ தணிக்கையாளரான M/s. DPV & அசோசியேட்ஸின் வரையறுக்கப்பட்ட மதிப்பாய்வு அறிக்கையுடன், முடிவுகள் நிறுவனத்தின் இணையதளம் https://www.indiaradiators.com /others-ல் கிடைக்கின்றன. மேலும் பங்குச்சந்தை இணையதளமான பி.எஸ்.இ லிமிடெடின் www.bseindia.comலும் கிடைக்கிறது.

செபி பட்டியல் விதிமுறைகளின் விதிமுறை 47க்கு இணங்க, பின்வரும் விரைவு பதில் (QR) குறியீட்டை ஸ்கேன் செய்வதன் மூலமும் இதை பார்க்கலாம் என்பதை இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்தியா ரேடியேட்டர்ஸ் லிமிடெட்டிற்காக

இடம்: சென்னை
தேதி : 23.05.2025

E N ரங்கஸ்வாமி
முழு நேர இயக்குநர்
(DIN: 06463753)

Marsh propels Lucknow to 33-run victory

Ahmedabad, May 23:

Mitchell Marsh's blistering 117 and a disciplined bowling display helped Lucknow Super Giants register a commanding 33-run victory over Gujarat Titans in the 64th match of the Indian Premier League at the Narendra Modi Stadium here on Thursday.

Chasing a mammoth target of 236, Gujarat could only manage 202 for 9 in their 20 overs despite valiant knocks from Shahrukh Khan (57 off 29) and Sherfane Rutherford (38 off 22).

Earlier, Marsh was the architect of LSG's imposing total of 235 for 2. The Australian all-rounder, dropped early in his innings, made Gujarat pay with a punishing 117 off 64 balls, laced with 10 fours and 8 sixes. His innings was the cornerstone of a 121-run partnership with Nicholas Pooran, who remained unbeaten on 56 off 27 balls (4x4, 5x6).

Electing to bowl first, Gujarat failed to make early inroads. Aiden Markram (36 off 24) and Marsh added 91 for the opening wicket before the South African was dismissed by Ravisrinivasan Sai Kishore in the 10th over. From there, it was Marsh and Pooran who tore into Gujarat's bowling attack, with both pacers and spinners struggling to contain the flow of runs.

No Gujarat bowler managed more than a single wicket, with Rashid Khan proving unusually expensive, conceding 36 runs in just 2 overs. Mohammed Siraj (0/37), Kagiso Rabada (0/45), and Prasidh Krishna (0/44) all failed to make breakthroughs, and LSG capitalised to post their season-best total.

In response, Gujarat began briskly with Sai Sudharsan (21) and Shubman Gill (35 off 20) adding 46 in the powerplay, but the introduction of William O'Rourke (4-0-27-3) turned the tide. The Kiwi pacer removed Sudharsan, Rutherford, and the dangerous Rahul Tewatia (2) in a telling spell.

Shahrukh fought back with a 29-ball 57 (5x4, 3x6), briefly raising hopes for the hosts with a 86-run stand with Rutherford, but once the latter perished in the 17th over, the chase unraveled. Avesh Khan (3.5-0-51-2) and Ayush Badoni (1-0-4-2) wrapped up the tail efficiently.

For LSG, it was a collective bowling effort backed by a record-setting batting display. O'Rourke's three wickets and economical bowling proved pivotal, while Akash Maharaj Singh (1/29) and Shahbaz Ahmed (1/41) provided support at crucial junctures.

Indian squad for FIH Hockey Pro League European leg

New Delhi, May 23:

Hockey India on Thursday announced the 24-member Indian men's hockey team for the European leg of FIH Hockey Pro League 2024-25 (Men), which is scheduled to take place in Amstelveen, the Netherlands and Antwerp, Belgium from June 7 to 22.

Experienced dragflicker Harmanpreet Singh will continue to lead the side as Captain with midfield maestro Hardik Singh joining him as Vice-Captain.

India will begin their European leg with two matches each against the Netherlands on June 7 and 9 followed by the double header against Argentina on June 11 and 12 at the Wagner Stadium in Amstelveen.

The team will then travel to Antwerp to face Australia on June 14 and 15 before they end their campaign against hosts Belgium on June 21 and 22.

The squad includes Krishan Bahadur Pathak and Suraj Karkera as the goalkeepers. Sumit, Amit Rohidas, Jugraj Singh, Nilam Sanjeep Xess, Captain Harmanpreet Singh, Jarmanpreet Singh, Sanjay and Yashdeep Siwach will occupy the team's defence.

In midfield, the team features Raj Kumar Pal, Nilakanta Sharma, Vice Captain Hardik Singh, young prodigy Rajinder Singh, Manpreet Singh, Vivek Sagar Prasad and Shamsher Singh while Gurjant Singh, Abhishek, Shilanand Lakra, Mandeep Singh, Lalit Kumar Upadhyay, Dilpreet Singh and Sukhjeet Singh will be the attackers for team India.

India played the home leg of the FIH Hockey Pro League 2024-25 (Men) in Bhubaneswar earlier this year where they secured fifteen points with five wins in eight games and now stand third in the points table. With the highest-placed team of the league securing a spot in the 2026 Men's FIH Hockey World Cup, India will be hoping to improve upon their performance and win maximum points in the remaining eight matches of the tournament.

Speaking on the squad selection, chief coach Craig Fulton stated, "We wanted a bit more experience in the squad this time around and I am really happy with the selection. The team has been training well as we're looking to try and push as hard as possible and win the Pro League. Since there's qualification for the World Cup on the line, we want to try and get as many points to put ourselves in a good position for that."

Reflecting on the Bhubaneswar leg and the way ahead, Fulton said, "We haven't drawn any games so far in the tournament and I believe we need to turn our losses into draws and then go for a shootout, so if we don't really get the desired results, we can still get points on the board. We also need to improve our penalty corner conversion rate so yes, we've got some good objectives to try and achieve this time around."



13 share lead in Annai Arul school chess tournament

Chennai, May 23:

Thirteen players namely Umashankar, Ajjesh, Ayushh Ravikumar, Rutherford, Karthikeyan, Hiren, Venkatakrishnan, Saravanan, Pradiksha, Vinoo Varshan, Ram Kumar, Srinivasan Subramanian and Iniyan are leading with 4 points at the end of the fourth round of the Annai Arul Public School's 1st International Fide Rated Chess Tournament here at Annai Arul Public School, Madambakkam, Chennai.

This event was inaugurated jointly by Joseph Selva Kumar, Correspondent, Annai Arul Public School and Christopher Antony Joseph, Dean, Annai Arul Public School.

This event attracted 435 players from Chattisgarh, Maharashtra, West Bengal, Kerala, Puducherry, Odhissa, Goa, Andaman Karnataka and various parts of Tamilnadu and also from USA, South Korea and Germany including 205 Fide rated players.

Cash prize of Rs.5 lakhs will be awarded with first prize of Rs.50,000. This is nine round Swiss event.



The inauguration of the Gojan Cricket Grounds located at the Gojan School Of Business And Technology, Edapalayam, Red Hills. Four grounds, three turf and One Matting were inaugurated at the campus. The Nets Facility at the campus includes 10 turf wickets. V.V. Kumar, Former Indian Cricketer and A.G. Satvinder Singh, Former Tamil Nadu Cricketer were the Chief Guests and inaugurated the grounds in the presence of Dr. P. Ashok Sigamani, President TNCA, M. Prathap, Collector, Tiruvallur District, Dr. G. Natarajan, Chairman, Gojan Educational Institutions, N. Viswanathan, Adam Sait, Vice President, TNCA, R.I. Palani. Secretary, TNCA, T.J. Srinivasraj, Treasurer, TNCA and Dr. R.N. Baba, Assistant Secretary, TNCA.

Bob's Banter

Robert Clements



Ceremonial Power, Colonial Palaces..!

Some years ago, I had the privilege—or perhaps the irony—of being accommodated in a guest house inside the Rashtrapati Bhavan compound. Yes, the President's house. It was just one of those rare opportunities that came my way.

woke up the next morning to the sight of peacocks strolling past my window as if they had full Z+ security clearance. There was dew on the well-manicured lawns, and I half expected Lord Mountbatten to emerge from behind the hedges for a morning stroll. The breakfast that followed was served by immaculately dressed waiters—so crisp and clean, I almost apologised for wrinkling the air around them.

But what struck me the most were the bathrooms. Yes, the bathrooms. Gilded fittings. Hot water flowing smoother than Parliament sessions. And the sheer size—each one bigger than a Mumbai 2BHK! I nearly got lost trying to find the flush.

And all this lavishness, for whom?

For ceremonial figures. Yes, you heard right—ceremonial. The Rashtrapati Bhavan, and its mini-cousins, the Raj Bhavans in every state, are colonial relics meant for rulers who actually ruled. The British didn't just govern India, they did it with a throne and a rod.

Their homes needed to match their delusions of grandeur.

But here we are, three-quarters of a century later, still gifting the same opulence to posts that are meant to do nothing more than sign on dotted lines and smile politely at flag hoistings.

And therein lies the problem.

Give someone a palace and suddenly, they start believing they're meant to rule.

They stroll through teak corridors, glide past oil paintings, and somewhere between the chandelier and the chef's soufflé, they forget they're supposed to be symbolic. They begin to imagine themselves as CEOs of the state, not realising they're barely on the board.

And that's when the overreach begins.

One fine morning, a governor thinks he's a parallel chief minister. Another day, the President forgets he or she is not the Prime Minister. They reject bills, summon CMs, and generally cause as much friction as possible—all while perched on antique chairs worth more than an MLA's constituency fund.

So maybe, just maybe, we need to bring the living quarters in line with the job description. Modest 2BHKs in the suburbs. Let the governor live next to a retired bank manager and the President, a smaller accommodation than the Prime Minister.

It might just help them remember that in a democracy, power flows up from the people, not down from the domes of grand buildings.

And think of the savings! No more millions spent on polishing marble floors or trimming lawns big enough to land a chopper. That money could go to schools, hospitals, or even better—public toilets that don't smell like colonial hangovers.

Let's make democracy modest again. Starting with its palaces which are giving a wrong message to it's occupants….!

bobsbanter@gmail.com

Manikandan wins silver in Para Climbing World Cup

Kolkata, May 23:

India's Manikandan Kumar has made the country proud when he clinched a silver medal in the ongoing Para Climbing World Cup in Salt Lake City, USA, the Indian Mountaineering Foundation (IMF) said here on Thursday.

Thirty-nine-year-old Polio survivor Manikandan Kumar representing the IMF, country's mountain and adventure sport climbing regulatory body, has won the silver medal in the RP2 category at the Para Climbing World Cup in Salt Lake City, USA. " This achievement marks a strong start to the season," IMF's eastern region Chairman Debraj Dutta said in a statement.

NAME CHANGE

I, Syedreyase Ahamed, S/o. Syed Khader, Date Of Birth: 17.03.1956, residing at Kgeyes Primrose, Flat No.12D, Block–1, 7, Velachery - Tambaram Main Road, Jeeva Nagar Extension, Pallikaranai, Chennai–600 100. shall henceforth be known as **RIYASE AHMED**

Syedreyase Ahamed

NAME CHANGE

My Son Old Name: Shanthoes Soundravelu Date Of Birth: 21.08.2012, Address: New No.82, Old No.230, G.S.T. Road, Urapakkam, Tambaram -603210. shall henceforth be known as Given Name: **SHANTHOSH** Sur Name: **SOUNDRAVELU**

Soundravelu Venkatesan (Father)

NAME CHANGE

I, Sulaiman Sherif Anver Rahiman Sherif, S/o. Anver Rahiman Sherif, Date Of Birth: 12.03.1974, residing at No.169, SKS Heritage, SIA Block 2nd Floor, A S Rajan nagar, New Perungalathur, Peerkankaranai, Tambaram –600 063. shall henceforth be known as Given Name:**SULAIMAN SHERIF** Sur Name:**RAHIMAN SHERIF**

Sulaiman Sherif Anver Rahiman Sherif

NAME CHANGE

I, M.Subalakshmanan S/o. Nagendra Rao, Date Of Birth: 05.09.1987, residing at No.76, 2nd Street, Bharath Nagar, Ernavoor, Chennai–600 057. shall henceforth be known as **SUBHA LAKSHMANA**

M.Subalakshmanan

PUBLIC NOTICE

It is hereby informed that the film MR.Zookeeper was produced by J4 studios, rep by its Partners Rajarathinam and Arokiadass and the said J4 studios its having all the rights of the said film if anybody deals with said film with any third person and thereby created any charges, liabilities, obtaining loans or entering agreement will not bind my client in any manner and they will do the same at their own risk.

A.THIRUNAVUKKARASU,
Advocate
No.114, Additional Law Chamber
High Court, Chennai - 600 104

DOCUMENT LOST

This is to inform the general public that i lost my original land documents
1.Document No. 5127/2010
SRO: Ramakrishnarajupettai
2.Document No. 5976/2010
SRO: Arani, Tiruvallore
Contact:

M.Amutha
W/o. D.Madasamy,
No.29, 3rd Street,
Avadi Washermen Residence,
Avadi Taluk, Chennai -71
Cell No. 93828 30452

Karur Vysya Bank — Smart way to bank

REGD Office: No 20, Vadivel Nagar, L N S Post, Erode Road, Karur-639002
Chennai Dhandapani Street Branch(1239): No 19, 1st Floor, Dhandapani Street T Nagar Chennai - 17

NOTICE TO LOCKER HOLDER
DEFAULTER IN PAYMENT OF LOCKER RENT
SAFE DEPOSIT LOCKER BREAK OPEN PUBLIC NOTICE

The following hirers have availed safe deposit locker facility from **Karur Vysya Bank, Chennai Dhandapani Street Branch** and failed to renew the same within the stipulated time, in spite of repeated notices issued to them by The Karur Vysya Bank Ltd. Since the hirers have failed to pay the locker rent dues, we are constrained to break open of the said locker on **27.06.2025 (Friday) at the above branch premises at 11.30 a.m.** This Public Notice is to the hirer/legal heirs of the hirer if applicable. Further, The Karur Vysya Bank Ltd has the authority to change the Break Opening Date without any prior notice.

Sl.No	Name of Locker Holders	Locker No	Overdue Amount
1	Mohamed Jamaludeen S V M	1239001B013	₹ 8,700/-
2	Aarthi Priya R, Vasanthi R	1239001B037	₹ 14,700/-
3	Revathy A	1239002B006	₹ 13,500/-
4	Uma T, Ramakrishnan T	1239002B026	₹ 12,300/-
5	Soundararajan T M	1239002B036	₹ 13,500/-
6	Venkatesan P, Rani V	1239006F021	₹ 24,000/-
7	Renggarajen G	1239007B038	₹ 14,700/-
8	Santhana Raman K, Saraswathy	1239007B045	₹ 14,700/-

Place: Chennai
Date : 23.05.2025

AUTHORISED OFFICER
The Karur Vysya Bank Ltd.

IYKOT HITECH TOOLROOM LIMITED

Regd. Office: No. 131/2 Thiruneermalai Road, Nagalkeni, Chrompet, Chennai- 600044. Email: info@iykot.com | Website: www.iykot.com
Tel. No. +91 44 4316 2280. CIN: L27209TN1991PLC021330
Extract of Statement of Audited Financial Results for the Quarter and Year Ended 31.03.2025

Rs. in Lakhs

Sl. No	Particulars	Quarter Ended			Year Ended	
		31.03.2025	31.12.2024	31.03.2024	31.03.2025	31.03.2024
		(Unaudited)	(Unaudited)	(Unaudited)	(Audited)	(Audited)
1.	Total Income from operations (net)	97.00	78.38	7.01	509.97	142.11
2.	Net Profit / (Loss) for the period (before Tax, Exceptional and / or Extraordinary Items)	-27.20	-14.80	-78.05	-105.20	-198.69
3.	Net Profit / (Loss) for the period (before Tax and Exceptional Items)	-27.20	-14.80	-78.05	-105.20	-198.69
4.	Net Profit / (Loss) for the period (before Tax and after Exceptional Items)	-27.20	-14.80	-78.05	-105.20	-198.69
5.	Net Profit / (Loss) for the period (after Tax and after Exceptional and Items)	-26.54	-14.80	-78.05	-104.54	-198.68
6.	Total Comprehensive Income for the period [Comprising Profit / (Loss) for the period (after tax) and Other Comprehensive Income (after tax)]	-26.54	-14.80	-78.05	-104.54	0.00
7.	Equity Share Capital	481.65	481.65	304.20	481.65	304.20
8.	Earnings per Share (before extraordinary items (of Rs.10/- each) for (continued and discontinued operations)	-0.29	-0.15	1.28	-1.15	-3.27
9.	Basic and Diluted	-0.29	-0.15	1.28	-1.15	-3.27

Note :
1. The above results for the quarter ended 31st March 2025 have been reviewed by the Audit Committee and approved by the Board of Directors of the Company at their meeting held on 22.5.2025.
2. The Company operates only in only one business segment.
3. The Statutory Auditors of the company have carried out a review of the results for the quarter ended 31.03.2025.
4. In Compliance with the Ministry of Corporate Affairs (MCA) Notification dated 16th February, 2016, announcing the Companies (Indian Accounting Standards) Rules, 2015 (Ind AS), the Company has prepared its Standalone Financial Statements adopting Ind AS with effect 01st April, 2017 with transition date of 01st April, 2016.

By Order of the Board
For **IYKOT HITECH TOOLROOM LIMITED**
Sd/-
LIKHITTA DUGAR
Whole-Time Director - DIN: 09768742

Place: Chennai
Date : 22.05.2025

SOUTHERN LATEX LIMITED

Regd. Office: B-11/W, Sipcot Industrial Complex, Gummidipoondi 601 201
E-mail: southernlatexltd@yahoo.com, Website: www.southernlatex.in | CIN: L25199TN1989PLC017137
STATEMENT OF STANDALONE AUDITED FINANCIAL RESULTS FOR THE QUARTER AND YEAR ENDED 31ST MARCH,2025
[See Regulation 47(1) (b) of the SEBI (LODR) Regulations, 2015]

(Rs. In lakhs)

Sl. No.	Particulars	Current Year ended 31.03.2025	Previous Year ended 31.03.2024	Quarter Ended on 31.03.2025
1.	Total Income from Operations (including other income)	53.90	55.25	35.90
2.	Net Profit / (Loss) for the period (before Tax, Exceptional and/or Extraordinary items)	27.43	27.84	25.29
3.	Net Profit / (Loss) for the period before tax (after Exceptional and/or Extraordinary items)	27.43	27.84	25.29
4.	Net Profit / (Loss) for the period after tax (after Exceptional and/or Extraordinary items)	23.15	23.50	21.01
5.	Total Comprehensive Income for the period [Comprising Profit / (Loss) for the period (after tax) and Other Comprehensive Income (after tax)]	23.15	23.50	21.01
6.	Equity Share Capital	735.92	735.92	735.92
7.	Reserves (excluding Revaluation Reserve) as shown in the Audited Balance Sheet of the previous year	(58.77)	(81.92)	(58.77)
8.	Earnings Per Share (of Rs. 10/- each) (for continuing and discontinued operations)			
	1. Basic :	0.315	0.320	0.285
	2. Diluted :	0.315	0.320	0.285

Note:
a) The above is an extract of the detailed format of Quarterly/Annual Financial Results filed with the Stock Exchanges under Regulation 33 of the SEBI (Listing and Other Disclosure Requirements) Regulations, 2015. The full format of the Quarterly/Annual Financial Results are available on the websites of the Stock Exchange(s) and at www.southernlatex.in
b) Exceptional and/or Extraordinary items adjusted in the Statement of Profit and Loss in accordance with Ind-AS Rules / AS Rules, whichever is applicable.
c) The company operates only in one segment named coir sales.
d) The above Audited Financial results have been reviewed and recommended by the Audit Committee approved by the Board of Directors at its meeting held on 22/05/2025.The Statutory auditors have expressed their unmodified Opinion on these Financial Results.
e) Figures have been grouped wherever necessary to make them comparable

For Southern Latex Limited
NEELAKANDA PILLAI
Managinng Director
DIN:00084550

Place : Chennai
Date : 23.05.2025